1012

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்ரிகை

விகாரி
வைகாசி - ஆனி

JUNE
1959

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

தொகுதி 21
பகுதி 6

Vol. 21
No. 6

ஆசிரியர் :
பண்டித ஸ்ரீ. மெ. ஸௌந்தரராஜாசார்ய, ஸ்ரீரங்கம்.

உப ஆசிரியர் & பிரசுரகர்த்தா:
S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி,
வைத்யவிசாரத, ஆயுர்வேத சிரோமணி, திருச்சி.

பொருளடக்கம்

முயற்சி பயனளிக்கின்றது	3
ஸ்வர்ணமாலிகா வஸந்தம்	5
...பூத யோகங்கள்.	9
...மௌஷதம்	13
...சிகித்ஸா	17
... சொற்கள் அகராதி (தனி)	23—28
...ரத்னாகரம் — (தனி)	1—4

Annual Subscription Rs. 5/-

27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

X
M59.21.6.
188877

நீலிபிருங்காதி தைலம்

எண்ணெய் ஸ்நானத்திற்கும் எல்லா கால நிலைகளிலும் ஆரோக்கியமான கூந்தல் வளத்திற்கும் மெருகுக்கும் அனைவராலும் பாராட்டப் பட்டது.

தயாரிப்பாளர்கள் :

ஆர்ய வைத்தியசாலா

(ஸ்தாபிதம்: 1902)

கோட்டக்கல். (கோழிக்கோடு ஜில்லா)

கிளைகள் : கோழிக்கோடு (போன் 155) திரூர் (போன் 31), பாலக்காடு (போன் 104), ஈரோடு, மற்றும் எர்ணுகுளம். விற்பனை டிப்போ : பாலக்காடு (வெட்டிகுளம் ரோட்).

600-க்கு மேற்பட்ட தரமான ஆயுர்வேத மருந்துகள் விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்படுகின்றன. எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் சிறந்த ஆயுர்வேத சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. நவரக்கிழி, தாரா, பிழிச்சல் முதலான விசேஷ கேரள முறைகளும் கோட்டக்கல்லில் எங்கள் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங் ஹோமில்** மிதமான கட்டணங்களில் அளிக்கப்படுகின்றன. நேரில் ஆலோசித்தோ அல்லது தபால் மூலமோ, எமது பிரதான வைத்தியர் சிகித்சையும், மருந்தும் அளிப்பார்.

மேல் விவரங்களுக்கு தயவு செய்து

மானேஜிங் டிரஸ்டிக்கு எழுதவும்.

A WORD OF ADVICE

If You are ever in need of Pure Musk, Saffron, Shilajit, Hing, Pearls & Himalayan Drugs etc., etc.,

Never make Experiments with Un-Known and Un-Reliable Firms

Have your requirments from :—

KALIA BROTHERS (Regd.)

5C/9, ROHTAK ROAD, NEW DELHI—5.

OR

KALIA BROTHERS (Regd.)

JULLUNDUR CITY—N. INDIA.

✲

ஓர் ஆலோசனை

எப்போதும் சுத்தமான கஸ்தூரி, குங்குமப்பூ, சிலாஜித், பெருங் காயம், முத்து, ஹிமாலய மூலிகைகள் முதலியன உங்களுக்குத் தேவையானல்-

முன் பின்னறியாததும் நம்பிக்கையில்லாததுமான ஸ்தாபனங்களோடு ஒருபோதும் பரீக்ஷை செய்ய வேண்டா.

உங்கள் தேவைகளைப் பெறுவதற்குத் தக்க இடம்:

கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)

5 C/9, ரோஹ்தாக் ரோடு, புது டில்லி—5.

அல்லது

கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)

ஜலந்தர் ஸிடி—(வட இந்தியா)

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1939) Phone No. 660

ரஸசாலா:
28, A. தென்னூர் ரோடு,
திருச்சிராப்பள்ளி 1.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:
31, சின்னக்கடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி 2.

வைத்யர்களுக்குத்தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்த்ரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன.

வைத்யர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.

எமது விசேஷ மருந்துகள்

4. சந்திரிகாவலேஹம்.

மூலம். எமது விசிஷ்டயோகஸங்கிரஹம், யாதவஜீயின் ஸித்த யோக ஸங்கிரஹம்.

ஸர்பகந்தா வம்சலோசனம் சதாவரீரஸம் சங்கபுஷ்பீரஸம் விதாரீரஸம் இவைகளை முக்யமாகக் கொண்ட புத்திப்பிரஸாதன ரஸாயனம்.

புத்தியைத்தெளிவு படுத்தி உணர்ச்சிகளின் கடும் வேகத்தைக் குறைத்து மனதிற்கு சாந்தி அளிக்க வல்லது தூக்கமின்மை, புத்திப்பிரமம், கட்டுக்கடங்காத உணர்ச்சிக் கொந்தளிப்பு, தலைசுற்றல், மயக்கம், கைகால்களில் எரிச்சல் ரத்தக்கொதிப்பின் பல் வேறு நிலைகளில் பித்தரத்தது‌ஷ்டியால் ஏற்படும் உபத்திரவங்கள். இவைகளில் நம்பிக்கையுடன் கையாளக்கூடியது.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்.

S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, மானேஜிங் டைரெக்டர்

சென்னை-600
18887

ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்ய சந்த்ரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 21 Vol. 21	விகாரி – வைகாசி – ஆனி JUNE 1959	பகுதி 6 No. 6

आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयपृथुमण्डलादियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥

முயற்சி பயனளிக்கின்றது.

டிரக்ஸ் ஆக்டின் விவரத்தில் காணும் மெடிகல் பிராக்டிஷனர் என்ற சொற்றொடரின் பொருள் விளக்கும் வழியாக ஆயுர்வேத யுனானி வைத்யர்கள் 'மெடிகல் பிராக்டிஷனர்' அல்ல என்ற விளக்கம் லோகஸபையில் கொடுக்கப்பட்டுள்ளதைச் சென்ற இதழில் குறிப்பிட்டோம். ஆயுர்வேத வைத்யர்கள் ஸம்பந்தப்பட்ட மட்டில், சர்க்காரும் அலோபதியினரும் துவேஷ நோக்குடன் நேர்மையற்று நடக்கின்றனர் என்ற வருத்தத்திற்கு இடமளிப்பதைத் தவிர இதில் விசேஷமில்லை. ஆனால் இணைப்புக் கல்வி பெற்றவர்களுக்கும் இத்தடை பாதகமளிப்பதைப் பார்க்கும் போது இக்கல்வி பெறும் காலத்தில் அதிக அளவில் அலோபதி கற்றும் அவர்களுக்கும் இந்த சிரமமளிப்பது மிகவும் வருந்தத் தக்கது. ஆனால் இம்மசோதாக்களும் திருத்தங்களும் விவாணங்களும் லோகசபையிலும் ராஜ்ய சபைகளிலும் வெளியாகும் போது நாட்டு வைத்யத்திலும் இணைப்பு முறைகளிலும் அபிமானமுள்ள சிலராவது ஆக்ஷேபணை தெரிவிக்கும்படி வகை செய்யாதிருப்பது வைத்ய சமூகத்தின் சோம்பலைக் காட்டுகின்றது. இந்நிலை மாறி அவ்வப்போது வைத்யர்கள் மக்கள் பிரதிநிதிகளிடம் தங்களது வாய்ப்பு

களையும் தொழிலையும் பாதுகாக்க ஞாபகப் படுத்திக் கொண்டிருப்பது மிகவும் அவசியமாகின்றது. மசோதா மக்கள் சபையில் அங்கீகாரம் பெற்று வெளியானபின் அதில் செய்யப்படும் எத்தகைய விமர்சனமும் பலனளிக்காது, அதனால் மக்கள் சபையின் விவாதத்திற்கு வருமுன்னரே நேரிடையாக மந்திரியிடமோ அல்லது முக்யப் பிரதிநிதிகளிடமோ ஸபாநாயகரிடமோ நமக்குப் பாதுகாப்பளிக்குமாறு கேட்டுக் கொள்வது மிகவும் அவசியம். இதைக் காலத்தில் சரியாகச் செய்யாததால், இதுவரை வைத்ய ஸமூகத்திற்கு ஏற்பட்டுள்ள கெடுதி சொல்லால் விளக்கக் கூடியவை யல்ல.

ஆனால் சமீபகாலத்தில் சிலராவது இதில் சிரத்தை காட்டி வருகின்றனர் என்பதை யறிய நாம் மகிழ்ச்சி அடைகிறோம். அவர்களது முயற்சி பலன் தருகின்றதென்பதையு மறிய நமது ஊக்கம் வளர்கிறது. ஸமீபத்தில் பார்மஸி அமெண்ட்மெண்டில் 1958 என்ற திருத்த மசோதாவிலும் காணும் '**மெடிகல் பிராக்டிஷனர்**' சொற்றொடர் விவரணத்தில் நாட்டு வைத்யர்கள் இணைப்பு வைத்யர்கள் விலக்கப்பட்டிருந்தனர். இதை உடனடியாக கவனித்து டெல்லி பார்லிமெண்ட் கிளப் ஆயுர்வேத வைத்யசாலை வைத்யரும் மற்றும் சிலருமாக மக்கள் பிரதிநிதிகளை நேரிடையாக சந்தித்துப் பேசியதன் பயனாக ஏப்ரல் 22 தேதியன்று அந்த மசோதாவின் மீது நடந்த விவாதத்தில் சில பிரதிநிதிகளின் ஆக்ஷேபம் காரணமாக இணைப்பு முறைகளில் பயின்றவர்கள் மெடிகல் பிராக்டிஷனர்களாகக் கருதப்படுவார்கள் என்ற ஒரு திருத்தத்துடன் அந்த மசோதா நிறைவேறியதாக அறிகிறோம். இது அந்த வைத்ய நண்பர்களின் முயற்சிக்கு வெற்றி என்று நாம் மகிழ்கிறோம்.

ஆனால் நம் முன்னுள்ள பிரச்னைக்கு இது ஸமாதானமாகாது. டிரக்ஸ் ஆக்ட் போன்ற வேறு சில சட்டங்களிலும் இவ்வகைத் திருத்தங்கள் நிறைவேற்றப் படவேண்டும். அத்துடன் நாட்டு வைத்ய முறைகளைத் தனித்துப் பிரித்து அதை ஜனங்களின் நோக்கில் இரண்டாந்தரமாகக் காட்டும் அரசினரின் எண்ணத்தையும் மாற்றி யமைக்க முயல்வது அவசியம். முயற்சி பயன் தரும் என்பதில் சூழ்நிலை நமக்கு நம்பிக்கையளிக்கின்றது.

மக்கள் சபைக் கூட்டங்களும் ராஜ்ய ஸபைக் கூட்டங்களும் நடைபெறும் சமயத்தில் சில மக்கள் பிரதிநிதிகளையாவது ஸந்தித்து நமது பிரச்னைகளை அவர்களுடன் விவாதித்து அவர்களுக்கு அதில் விருப்பமும் உத்ஸாஹமும் வரும்படி செய்வது இன்று மிக அவசியமாகிறது.

ஸ்வர்ணமாலிகா வஸந்தம்.

[வைத்ய எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்திரீ, திருச்சி]

(ஏப்ரல் இதழின் தொடர்ச்சி)

ஸ்வர்ணமாலிகா வஸந்தம் என்ற பெயரில் வேறு மூன்று யோகங்கள் காணப்படுகின்றன;

1. வைத்ய சிந்தாமணியிலுள்ளது,

தங்கபஸ்மம் அல்லது ரேக்கு; முத்துபிஷ்டி அல்லது பஸ்மம், லிங்கம், வெள்ளிபஸ்மம், சுத்த கர்பரம் அல்லது கர்ப்பர பஸ்மம், லிங்கம், கந்தகம், ரஸம், நீல பஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம், ரஜதமாக்ஷிக பஸ்மம், அப்ரக பஸ்மம், தாம்ர பஸ்மம், வத்ஸநாபி, வைக்ராந்த பஸ்மம், அயஸ் பஸ்மம் இவைகளை வகைக்குச் சம எடை முறைப்படி கல்வத்திலிட்டு சேர்த்து தாமரைப்பூ (நீர் அல்லது சாறு) இலவந்துளிர் சாறு, கருப்பஞ்சாறு, பசுவின் பால், வாழைக்கிழங்கின் சாறு, முலைப்பால், அதிமதுரகஷாயம், கோரைக்கிழங்கின் கஷாயம், வெட்டிவேர் கஷாயம், விலாமிச்சை வேர் கஷாயம் இவைகளில் ஒருவாரம் நன்கு அரைத்து பின்பு பச்சைக்கர்பூர ஜலத்தில் ஒரு பாவனை செய்து 2 யவ அளவில் மாத்திரை செய்து ரோகத்திற்கேற்ற அனுபானத்துடன் கொடுக்க பித்தப்பிரமேஹம், பித்த ஜ்வரம், அதிக ஸ்தூலம், அதிகமெலிவு, தலைசுற்றல், எரிச்சல், நீர்ச்சுருக்கு அடைப்பு, பிரமேஹம் நபும்ஸகத் தன்மை, சுக்ரதோஷம் இவைகளில் கொடுக்க நல்லது.

இது அதிகமாகப் பழக்கத்திலில்லை.

2. ரஸபாரிஜாதத்தில் உள்ளது.

தங்கம் 1 தோலா, முத்து 2, தோலா, லிங்கம் 1 தோலா மிளகு 1 தோலா கர்பர பஸ்மம் 2 தோலா இவைகளை ஒரு தோலா வெண்ணெய் சேர்த்து அரைத்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு நெய்ப்பு போகும் வரை அரைத்து 1-3 யவ அளவு தேனுடன் சாப்பிட ராஜயக்ஷ்மா, ஜீர்ண ஜ்வரம் மண்ணீரல் பெருக்கம், பாண்டு, பிரமேஹம், அதிஸாரம் இவைகளை நீக்கும்.

3. ரஸாயன ஸங்கிரஹத்திலுள்ளது.

தங்கம் 3 தோலா, பவழ பஸ்மம் 3 தோலா, லிங்கம் 5 தோலா, மிளகு 8 தோலா, கஸ்தூரி ஒரு தோலா, கோரோசனை

ஒரு தோலா நாக (காரீய) பஸ்மம் 2 தோலா, வங்க பஸ்மம் 3 தோலா. அப்ரக பஸ்மம் 3 தோலா. குங்குமப்பூ ஒரு தோலா முத்து 4 தோலா, திப்பிலி ஒரு தோலா, கர்பர பஸ்மம் 11 தோலா இவைகளை 3 தோலா வெண்ணெய் சேர்த்துக் குழப்பி எலுமிச்சம் பழச்சாற்றுடன் அரைத்து நெய்ப்பு நீங்கியதும் 2 குந்துமணி யளவு தேனும் திப்பிலித் தூளும் சேர்த்துச் சாப்பிட ஜீர்ண ஜ்வரம், ரத்தப் பிரமேஹம், லிங்க சூலம், பாண்டு, காமலா, சூலம் ச்வாஸகாஸம், மூத்திர கிருச்சிரம், மூத்ராசம்ரீ, அதிஸாரம், கிரஹணீ, அர்சஸ், வீர்ய நஷ்டம், பாலகிரஹரோகங்கள், கர்ப் பிணீ ரோகங்கள், யோனி சூலம், பிரதரம், அதிஸாரம், ஸூதிகா ரோகம், லோம ரோகம் இவைகளில் மிக நல்லது.

நல்ல பலகாரி ரஸாயனமாகும். அமுக்கராக்கிழங்கு சூர்ணத் துடனும் இதை ஸேவிக்கலாம். பித்தத்தால் ஏற்படும் நோய் களில் இதைக் கையாள நல்ல குணம் கிடைக்கும்.

இந்த மூன்று யோகங்களில் முதல்யோகம் அதிகமாகப் பழக்கத்திலில்லாதது. இரண்டாவது யோகத்திற்கும் சென்ற இதழில் வெளியானதற்கும் தனித்தனி திரவ்ய அளவில் உள்ள வேறு பாட்டைத்தவிர வேறு வித்யாஸமில்லை. மூன்றுவது யோகத்தில் குங்குமப்பூ, கஸ்தூரி நாக - அப்ரக - வங்க பஸ்மங் களின் சேர்க்கை இம்மருந்தின் விசேஷ நலனைத் தரவல்லதாக இருக்கிறது.

மாலினீ வஸந்தம்.

ஸ்வர்ண மாலிகா வஸந்தத்தில் தங்கத்தையும் முத்துவை யும் தவிர மற்ற சரக்குளை மட்டும் சேர்த்துத் தயாரித்ததை மாலினீ வஸந்தம் வஸந்தமாலதீ என்ற பெயர்களில் குறிப்பிடுவர்.

செய்முறை:— சுத்தலிங்கம் 3 தோலா, மிளகு 4 தோலா. கர்பரம் 8 தோலா இவைகளைக் கல்வத்திலிட்டு நன்கரைத்து ஒரு தோலா வெண்ணெய் சேர்த்தரைத்தபின் எலுமிச்சம்பழச்சாறு விட்டு வெண்ணெய்யின் நெய்ப்பு நீங்கும் வரை அரைத்து மாத்திரை செய்து கொள்ளவும்.

ஸ்வர்ணமாலிகா வஸந்தம் கொடுக்குமிடங்களிலும் இதைக் கொடுக்கலாம். சற்று சக்தி குறைந்து காணும்.

வேறு முறை:— ரஸ முக்தாவளியில் தாது க்ஷயாதிகாரத்தி லுள்ளது. கர்பரம், மிளகு, ரஸம், கந்தகம் வகைக்குச் சம எடை

ரஸத்தையும் கந்தகத்தையும் கஜ்ஜலி செய்து மிளகு கர்பரங்களைச் சேர்த்து வெண்ணெய்யுடன் அரைத்துப் பிறகு எலுமிச்சம்பழச்சாறு சேர்த்தரைத்து 3-4 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். திப்பிலித்தூளும் தேனும் அனுபானம்.

தாது க்ஷயம் அக்னிமந்தம், விஷமஜ்வரம், அதிஸாரம், மூலம், பிரதரம். கிரஹணி, ரத்தபித்தம் இவைகளில் நல்லது.

வேறு முறை:— பஸவராஜீயம் நிகண்டுரத்னாகரம். ரஸகல்பலதா, டோடரானந்தம். முதலிய நூல்களில் ஜ்வரமுராரி என்றும், ரஸாவதாரத்தில் ரஸராஜம் என்றும். ரஸப்ரதீபத்தில் ஜீர்ணஜ்வரஹரமென்றும் ரஸகாமதேனுவில் நவஜ்வரார்ரி என்றும் ரஸபாரிஜாதத்தில் வியாதிகஜகேஸரி என்றும் வேறு பெயர்களுண்டு. வைத்ய சிந்தாமணி, யோகரத்னாகரம் முதலிய நூல்களில் வஸந்த மாலதி என்று பெயர்

மிளகு ஒருபங்கு, கர்பரம் 2 பங்கு, இவைகளை அரைத்து வெண்ணெய்யும் எலுமிச்சம்பழச்சாறும் சேர்த்து முன் போல் அரைத்து 6 யவ அளவு மாத்திரை செய்து சாப்பிடவும், பசுவின் பால் திப்பிலித்தூள் தேன் இவை அனுபானம். ஜ்வரம், நாட்பட்ட ஜ்வரம், விஷமஜ்வரம் தாதுகதஜ்வரம், ரத்தாதிஸாரம், மூலம். பிரதரம். நேத்ரரோகங்கள், ஸகல ரத்தஜ பித்தஜ ரோகங்கள் நீங்கும்.

இம் மூன்று முறைகளும் சற்றேறக் குறைய ஒரே குணமுள்ளவை. ஸ்வர்ணமாலிகா வஸந்தத்திற்கு அடுத்தபடியாக இவை உபயோகிக்கத் தக்கவை. நல்ல சீதவீர்யமான ரஸாயனமாகும். கபபித்தப்பிரகோபத்தில் உபயோகிக்கத்தக்கது. நாட்பட்ட முறை ஜ்வரம், நாட்பட்ட ஜ்வரம். ரஸம் ரக்தம் முதலிய தாதுக்களில் லீனமான ஜ்வரம் இவைகளில் நல்லது.

மலேரியா ஜ்வரத்தில் க்வினைன் முதலிய ஜ்வரஹரமருந்துகளின் அதிக உபயோகத்தால், சரீரம் வெளுத்து பலம் குன்றி தலை முதலிய இடங்களில் எரிவும் நாவரட்சியும் அதிக வியர்வையும் இரவில் களைப்பு மிகுதியும் பசியின்மையும் ரத்தக் குறைவும் ஏற்படும் போது இதன் உபயோகம் சாலச் சிறந்தது. ஜ்வரம உட்காங்கை இவைகளையும் குறைக்கின்றது.

பிரமேஹம், ரத்தப்பிரதரம், ரத்த பித்தம், அர்சஸ், சுவாஸம் நாட்பட்ட அதிஸாரம், ராஜயக்ஷ்மா இவைகளில் வியாதியின் கடுமையைக் குறைக்கவும் பலவீர்ய விருத்திக்கும் சிறந்தது.

தொடர்ந்து சில நாட்கள் ஜ்வரம் அடிக்கும் போது, ஜ்வரம் மேலெழுந்தவாரியாகச் சமனமடைந்தது போல காணப்பட்டாலும்

ஜ்வரகாரணமான தோஷ தூஷ்ய ஸம்மூர்ச்சனை நன்கு பிரியா விடில் ஜ்வரம் ஆமரஸத்திலிருந்து ரஸரக்தாதி தாதுக்களில் பரவித் தங்கி விடுகின்றது. நோயாளி மேலும் துர்பலனுகி காந்தி பசி ஜீர்ண சக்தி குன்றி விடுகின்றது. மாலினீவஸந்தம் ரஸரக்தங்களை ஆசிரயித்த ஜ்வரத்தை உட்காங்கையைக் குறைத்துரத்த விருத்தி செய்து ஆரோக்யத்தை அளிக்கின்றது. லோஹாஸவம் அமிருதாரிஷ்டம் குடுசி ஸத்வம் போன்ற அனுபானங்கள் சேர்த்துக் கொள்ளலாம்.

பாலர்களுக்கு உட்காங்கையால் உடல் மெலிந்து மார்கூடு பின்னி, வயிறு ஊதி துர்பலம் ஏற்படும் நிலையில் இதன் உபயோகம் மிகவும் குணம் தருகின்றது. அடிக்கடி கபத்தொந்தரவு ஏற்படுதல், பசியின்மை ஆவலுடன் உணவு ஏற்காமை, மந்தஜ்வரம். இளைப்பு, பலவீனம், எலும்புகளின் சக்திக் குறைவால் ஏற்படும் வளைவு, சரீரபாரம் கூட தாங்காமல் எலும்புகள் வளைதல், மூட்டுகள் பருத்திருத்தல் போன்ற நிலைகளில் மாலினீ வஸந்தம் நல்ல குணம் தருகிறது. எலும்புகள் இதனுல் வலிவு பெற்று நரம்புகள் திடமாகி குழந்தைகள் நன்கு விளையாட ஆரம்பிக்கின்றன.

வாத கப தோஷத்தால் ஏற்படும் அக்னிமந்தம் காரணமாக ஜீர்ணமாகாமல் மலமிளகி வெளியாகும். லேசாகஜ்வரம் உடல்வலி, சில நாள் மலக்கட்டு, சில நாள் மலமிளகிப்போதல், அருசி, புளித்த ஏப்பம் இவைகள் ஏற்படும் போதும் மாலினீ வஸந்தம் நல்ல குணம் தருகின்றது.

கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் ஜ்வரங்களில் நிர்ப்பயமாக கர்பத்திற்கும் தாய்க்கும் புஷ்டியளிக்கவும் ஜ்வரம் குறையவும் உபயோகிக்கத் தக்கது.

அதிகமாக மாதவிடாய் வெளியாவதால் அல்லது பிரதரத்தால் கர்ப்பாசயம் துர்பலமடைந்து கர்ப்பதாரணம் ஏற்படாமலும் ஏற்பட்டாலும் ஸ்ராவமாகியும் கர்ப்பம் தங்கினுல் அடிக்கடி ஜ்வரம் ஏற்பட்டும், சிசு வெளியானுல் மிகவும் மெலிந்து எப்போதும் நோயுற்று மிருக்கும் வழக்கத்திலுள்ளவர்கள் இதைத் தொடர்ந்து சாப்பிட கர்ப்பாசயம் வலிவடைந்து. கர்ப்பம் நன்கு ஏற்பட்டு, ஸ்ராவமாகாமல் புஷ்டியான பிள்ளைப்பேறு உண்டாகின்றது.

மாலினீ வஸந்தம் என்ற பெயரில் கர்ப்பரம் சேராத வேறு சில முறைகள் உண்டு. அவைகளை வேறு சமயம் கவனிப்போம்.

அனுபூத யோகங்கள்.

(வைத்யபூபதி, பிஷக்ரத்ன கவிராஜ் N. C. S. ராகவன், ஸ்ரீரங்கம்.)

சிந்தாமணி குளிகை.

சுத்தி செய்த ரஸம், சுத்தி செய்த கந்தகம், சுத்தி செய்த தாளகம், சுத்தி செய்த நாபி, சுத்தி செய்த லிங்கம் மஞ்சள் கடுக்காய் தோல் சூர்ணம், தான்றிக்காய் தோல் சூர்ணம், நெல்லிவற்றல் சூர்ணம், பொரித்த வெங்காரத்தூள், மேல் தோல் சீவின சுக்கு சூர்ணம், மிளகு சூர்ணம், அரிசித்திப்பிலி சூர்ணம், அக்கிரா காரச் சூர்ணம் இவைகள் வகைக்கு விராகனிடை 2½, சுத்தி செய்த நேர்வாளப் பருப்பு விராகனிடை 32, கரும்புச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:— முதலில் ரஸத்தையும் கந்தகத்தையும் கல்வத்திலிட்டு இரண்டும் நன்ருக உறவாகி கருப்பாகிற வரையில் அறைத்து எடுத்துக் கொள்ளவும். தாளகம் லிங்கம் இவைகளை தனித்தனியாக பொடித்துக் கொள்ளவும். நாபியையும் தனியாக இடித்து சூர்ணித்துக் கொள்ளவும். பிறகு நேர்வாளப் பருப்பை நன்ருக மை போல் அரைத்துக்கொள்ளவும். பின்பு சூர்ணங்களை எல்லாம் ஒன்ருகக் கலந்து வாளத்தில் சிறுகச் சிறுகச் சேர்த்து அரைத்து எல்லாம் நன்ருக உறவாடிய பின் கரும்புச் சாறை சிறுகச் சிறுக விட்டு எட்டு ஜாமம் அறைத்து அரைக்குன்றுமணி அளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைத்து எடுத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:— 1 முதல் 2 மாத்திரை வரையில்.

அனுபானங்களும் உபயோகமும்.

1. வெல்லத்துடன் மாத்திரையைச் சாப்பிட்டு பிறகு மேலே 2 விராகனிடை கரிசிலாங்கண்ணிச் சாற்றில் சர்க்கரை 1 விராகனிடை கலந்து சாப்பிடவும். நல்ல பேதியாகி, வயிற்றிலுள்ள துர்மலங்கள் நீங்கி தேக ஆரோக்யம் உண்டாகும்.

2. புளித்த பசு மோர் விராகனிடை மூன்றுடன் தேன் விராகனிடை 3 கலந்து சாப்பிட கிரஹணீ ரோகம் தீரும்.

3. எலுமிச்சம்பழச்சாறு விராகனிடை 2, தேன் விராகனிடை 2 கலந்து சாப்பிட்டாலும் கிரஹணி ரோகம் தீரும்.

4. பனை வெல்லத்தை மெழுகு போல் செய்து அதற்குள் மாத்திரையை வைத்து விழுங்க எலிகடி விஷம், பூரான்கடி விஷம், காணுக்கடி விஷம் முதலியவைகள் தீரும்.

5. 1 விராகனிடை சீனிச் சர்க்கரையில் வைத்து (சீனிச் சர்க்கரையை நைப்பாகும்படி கையில் வைத்துத் தேய்க்கவும்.) சாப்பிட பித்தரோகங்கள், தாக ரோகங்கள் தீரும்.

6. மணத்தக்காளி இலைச்சாறு விராகனிடை 2 தேன் விராகனிடை 2 கலந்து சாப்பிட, அக்னிதீபனம் உண்டாகி நல்ல பசி எடுக்கும்.

7. வல்லாரை இலைச்சாறு விராகனிடை 2 தேன் விராகனிடை 2 கலந்து சாப்பிட, தாக ரோகம் மேகப்படை சர்ம ரோகங்கள், திமிர் குஷ்டம் இவைகள் தீரும்.

8. தேனில் குழைத்து சாப்பிட வாத சுரம், பித்த சுரம், கப சுரம் ஆகிய மூவகை சுரங்களும் போகும்.

9. முருங்கப்பட்டைச் சாறு விராகனிடை 2 பசுவின் கோமயம் விராகனிடை 2 கலந்து சாப்பிட குன்ம ரோகங்கள் பேர்கும்.

10. 3 விராகனிடை புளியை 2 பலம் ஜலத்தில் கரைத்து வடிகட்டிய புளித்தண்ணீரில் 2 விராகனிடை சீனிச் சர்க்கரை கலந்து சாப்பிட மலபந்தம் ஜலபந்தம் தீரும்.

11. 3 விராகனிடை புளியை 4 பலம் ஜலத்தில் கரைத்து 3 மணி நேரம் தெளிய வைத்து, தெளிவைமாத்திரம் இறுத்து எடுத்து இதில் 2 விராகனிடை கற்கண்டைப் பொடித்துப் போட்டு கரைத்துச் சாப்பிட சகல உஷ்ண ரோகங்களும் சாந்தமாகும்.

12. குன்றுமணி இலைச்சாறு விராகனிடை 2 தேன் விராகனிடை 3 கலந்து சாப்பிட சன்னிபாத ஜ்வரங்கள் தீரும்.

13. இஞ்சிச்சாறு விராகனிடை 2, தேன் விராகனிடை 2 கலந்து சாப்பிட படர் தாமரை, தேமல், முதலிய சர்ம ரோகங்கள் நீங்கும்.

14. சீமை திராக்ஷைக்காடி விராகனிடை 2 தேன் விராகனிடை 2 கலந்து சாப்பிட வாய் நாற்றம், அண்ட வாத ரோகம் தீரும்.

15. 2 மாத்திரையை நல்லெண்ணை விராகனிடை 3 தேன் விராகனிடை 3 கலந்து இதில் மாத்திரைகளைக் கரைத்துப் பிறகு

இதில் வென்னீர் 2 ஆழாக்கு விட்டுக் கரைத்து வாய்க் கொப்பளிக்க பல்வலி, பல்புழு நீங்கும். வாயு சம்பந்தமான பல்வலிகளும் போகும். பல்வலி ரொம்ப தொந்தரவாக இருந்தால் இந்த மாத்திரையை ஆரம்பத்தில் பேதிக்குக் கொடுத்து வயிற்றிலுள்ள துர்மலங்களை நீக்கி பிறகு மேற்கண்டபடி வாய் கொப்பளிக்கவும். குணமாகும்.

குறிப்பு:— இந்த மாத்திரை எவ்வளக்கெவ்வளவு பழமையாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு விசேஷ குணத்தைத் தருகிற படியால் வைத்யர்களும் மற்றவர்களும் இதை செய்து கைவசம் வைத்திருந்தால் சமயங்களில் ரொம்ப ஒத்தாசையாய் இருக்கும். தவிர இந்த மாத்திரை இதில் சொல்லப்படாத இன்னும் அனேக வியாதிகளுக்கு உதவுகிறபடியால் அவரவர்கள் உபயோகித்து தங்கள் அனுபவத்தை நிச்சயித்துக்கொள்ளலாம். மேற்கண்ட அனுபானங்களைத்தவிர அவரவர்கள் தங்களுக்கு அனுபவமான அனுபானங்களையும் உபயோகித்துக் கொள்ளலாம்.

கோரோசனை மெழுகு

புதிதான சித்திர மூலவேர்பட்டைச் சூர்ணம் விராகனிடை 16. சுத்தி செய்த ரஸகர்ப்பூரம் விராகனிடை 2. கோரோசனை விராகனிடை 2. குங்குமப்பூ விராகனிடை 2 தேன் செல்லத்தக்க அளவு.

செய்முறை:— குங்குமப்பூவை கலுவத்தில் போட்டு நன்ருக பட்டுப்போல் அறைத்து பிறகு தேனை விட்டு நன்ருக அரைத்து பிறகு ரஸகர்பூரத்தைச் சேர்த்து அறைத்து நன்ருக அறைபட்ட பின்பு கோரோசனையையும் சேர்த்து அறைத்து பிறகு சித்திர மூலவேர் பட்டைச் சூர்ணத்தையும் சேர்த்து சிறுகச்சிறுக தேன் விட்டு 8 ஜாமம் கைவிடாமல் அறைத்து பத்திரப்படுத்தவும்.

அளவு:— 3 முதல் 5 குன்றுமணி எடை வரையில். வியாதி பலம் தேக சுபாவத்திற்குத் தக்கபடி உபயோகிக்கவும்.

அனுபானம்:— சீனிச் சர்க்கரை, பனை வெல்லம் முதலியவைகள்.

தீரும் நோய்கள்:— சூலை ரோகங்கள், அரையாப்பு, கண்டமாலை, நுணுக்காய் கிரந்தி, கள்ளிப்பூ கிரந்தி, மேகாரணங்கள், சூதக வாயு. யோனிப்புற்று, லிங்கப்புற்று கருப்பவாயு, உதிரச்சிக்கல் பிரஸவித்த ஸ்திரீகளுக்கு ஏற்படும் உதிரச்சிக்கல், உதரச்சிக்கலினல் ஏற்பட்ட ஜன்னிதோஷம் முதலியவைகள் தீரும். சூதகம் கட்டுப்பட்டிருக்கிறவர்களும் உபயோகித்தால் அதை உடைத்து வெளிப்படுத்தும்.

பத்தியம்:— புளியை நீக்கி 7 நாள் காலே மாலே 2 வேளை உபயோகித்து 8-ம் நாள் சிற்றுமணக்கு எண்ணை அல்லது முக்கூட்டு எண்ணை (அதாவது சிற்றுமணக்கு எண்ணை - நல்லெண்ணை பசுவின் நெய் சேர்த்து முக்கூட்டு எண்ணை) தேய்த்து சனி-புதன் ஆகிய நாட்களில் ஸ்நாநம் செய்ய வேண்டும்,

இவ்விதம் 4-5 ஸ்நாநம் செய்து பிறகு வழக்கம் போல் ஸ்நாநம் செய்யவும், வியாதி லகுவாய் இருந்தால் மூன்று நாள் அல்லது நான்கு நாள் உபயோகித்தால் போதுமானது.

குறிப்பு:—சில தேகிகளுக்கு வாய்பிடிக்கும். அப்படிப்பட்டவர்கள் தினம் 4-5 தடவை தாம்பூலம் போட்டுக்கொண்டால் வாய் பிடிக்காது. அல்லது கந்தக புளிப்பை (Sulphuric Acid) ஜலத்தில் கரைத்து வாய் கொப்பளித்து வந்தால் மருந்தின் வேகமிராது. வேறெந்த மருந்தினாலும் தீராத துஷ்ட வியர்திகளுக்கு இந்த மருந்து ஒரு சஞ்சீவி போன்றது.

இளநீர் கிருதம்

பருமனான இளநீர் 8 (செவ்விளநீராயிருந்தால் உத்தமம் பசுவின் நெய் பலம் 10, லவங்கம், கோஷ்டம், அதிமதுரம், இலுப்பைப்பூ, சந்தனம், திராக்ஷைப்பழம், சீனகற்கண்டு, சீனிச்சர்க்கரை வகைக்கு பலம் ½,

செய்முறை:— இளநீரின் மேல் தோலை மாத்திரம் சீவி உள் நாருடன் நான்கு நாள் சேற்றில் புதைத்து வைத்து ஐந்தாம் நாள் எடுத்து உடைத்து இளநீரை மாத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டும். இத்துடன் நெய்யை கலந்து பிறகு இத்துடன் கல்க சாமான் சூர்ணங்களுடன் கற்கண்டு, திராக்ஷை சீனிச்சர்க்கரை இவைகளையும் சேர்த்து தண்ணீர் விட்டு அம்மியில் வெண்ணை போல் அறைத்து முன் சொல்லிய இளநீர் நெய் முதலியவைகளுடன் கலந்து அடுப்பேற்றி சிறுதீயாக எரித்து பதத்தில் வடிகட்டி வைத்துக் கொள்ளவும்,

அளவு:— 3 முதல் 4 விராகனிடை வரையில்.

தீரும் நோய்கள்: — நீரழிவு, நீர்கடுப்பு, நீர்ச்சுருக்கு, பிரமேகம், வெட்டை ரோகம் ஆகியவைகள் தீரும்.

பரமௌஷதம்.

(வைத்ய பிந்து மாதவ பண்டிதர். நாஸிக்.)

[நோயற்ற வாழ்வின் பாதுகாப்பிலும் ஆரோக்யவளர்ப்பிலும் சிறந்த உணவுப் பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சித் தொகுதியில் நல்லெண்ணெய் நெய் தேன் என்ற இம்மூன்று பொருள்களும் அளிக்கும் உதவியை இந்தக் கட்டுரையில் ஆசிரியர் விவரித்துள்ளார். ஒவ்வொரு வைத்யரும் கையாண்டு அபிவிருத்தி செய்யவேண்டிய வழி இது. ஆசிரியர்.]

शरीरजानां दोषाणां क्रमेण परमौषधम् ।
बस्तिः विरेको वमनं तथा तैलं घृतं मधु ॥

என்று வாக்படரின் சிகித்ஸா ஸூத்ரம் குறிப்பிடுகிறது. உடலை பாதிக்கும் வாதபித்தகபநோய்களுக்கு முறையே பஸ்தியும் விரேசனமும் வமனமும் அவ்விதமே எண்ணெய்யும் நெய்யும் தேனும் சிறந்த ஔஷதங்களாகின்றன. ஆயுர்வேதத்தில் ஸ்வஸ்தனுக்கான வழிகள் எவ்வழியில் அமைந்துள்ளன என்ற எனது வெகு நாளைய ஆராய்ச்சிகளுக்கு ஓர் முடிவை ஸமீபத்தில் நான் காண நேர்ந்தது. அது தான் வாக்படரின் சிகித்ஸா ஸூத்ரத்தில் காணும் குறிப்பு. அதன் விரிவுரை தான் இக்கட்டுரையின் நோக்கம்.

எனது நெருங்கிய நண்பருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்து முதல் ஆண்டு பூர்த்தி விழாவின் போது ஏதாவது ஒரு அன்பளிப்பு கொடுக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. குழந்தைகளில் ஒன்று பெண், மற்றொன்று ஆண். மிகவும் இளைத்துத் துர்பலமானவை. துர்பலமான ஒரு வயதுள்ள குழந்தைகளுக்கேற்ற தின்பண்டத்தைப் பற்றி யோசிக்கையில் பிஸ்கட் சாகலேட் போன்றவை வைத்யனால் கொடுக்கத் தக்கவையல்ல என்ற யோசனை எழுந்ததின் பேரில் அச்சிசுக்களுக்கு நல்ல பல புஷ்டியளிப்பவை எவை என்ற சிந்தை எழுந்தது.

சிசுக்களுக்குத் தேனையும் நெய்யையும் கலந்து கொடுக்கும் கௌமாரப்ருத்ய உபதேசம் ஞாபகத்தில் வந்தது. தாய்க்குப் பால் ஊறுதவரை தேன்நெய் கலவை கொடுப்பது உண்டு. இது நல்ல பித்த கப சமனமாகும். வாத சமனமும் சேரவேண்டுமானால் தைலமும் எண்ணெய்யும்) சேர்க்கபபடவேண்டும். சியவன் ப்ரகாசம், அகஸ்திய ஹரீதகீ, வஸிஷ்ட ரஸாயனம், ஆமலக ரஸாயனம் போன்ற ரஸாயன யோகங்களில் இம்மூன்றையும் கலந்திருப்பதும் கவனத்திற்கு வந்தது. இந்த அடிப்படையில் சிசுவிற்கு ருசிக்க வேண்டிய இனிப்புள்ள தாக்க தேன் 2 அவுன்ஸ், நெய் 1 அவுன்ஸ், நல்லெண்ணெய் 1 அவுன்ஸ் இம் மூன்றையும்

கலந்து வாக்படர் அளித்த சிறப்புப் பெயரை 'பரமௌஷதம்' என்பதையே அதற்குமிட்டேன். பாட்டிலிலிட்டு இம்மூன்றையும் குலுக்கியதில் வெள்ளை ரோஜா நிறத்தில் அவலேஹம் (நாக்கால் சப்பி சாப்பிடக்கூடிய இளகிய லேகியப்பதம்) தயாரானது. இதையே எனது அன்பளிப்பாக சிசுக்களிடம் கொடுத்தேன்.

குழந்தைகளின் தகப்பனர் என்னிடம் மிகுந்த விச்வாஸ முள்ளவராகையால் இதை தினமும் சிசுக்களுக்கு 1 ஸ்பூன் (½ தோலா) அளவு காலை மாலை கொடுத்து வந்தார். குழந்தைகளும் விரும்பி இதைச் சாப்பிட்டன. நல்ல பசி, தூக்கம், மல மூத்திரங்கள் சரியாக வெளியேற்றம் இவைகளில் திருப்திகரமான மாற்றம் தெரிந்ததும் சிசுக்களின் தந்தையார் இதையே தொடர்ந்து என்னிடமிருந்து பெற்றுக் கொடுத்து வந்தார். அதனுல் குழந்தைகளின் எலும்புகளுக்கு வலுவும் தசைகளில் புஷ்டியும் தலையில் கரும் கேசங்களும் ஏற்பட்டன. பற்கள் நன்கு முளைத்தன. அப்போது வரும் உபத்ரவங்கள் ஒன்றையும் காணேம்.

இந்த அனுபவத்தை மேலும் பரிசோதனை செய்ய நாஸிக்கிலுள்ள ஆயுர்வேத ஸேவாஸங்கத்தின் சார்பில் நடக்கும் ஆரோக்ய சாலையிலும் பிரஸவவிடுதியிலும் இதைப் பரீக்ஷித்துப் பார்த்ததில் நல்ல த்ருப்திகரமான முன்னேற்றம் காணப்பட்டது.

பரமௌஷதம் நல்ல பிரும்ஹண (உடலைப் பருக்கவைக்கும்) கல்பமாகப் புலப்பட்டது. ஸௌம்யமானது. பிறந்த சிசுவிற்கு முதல்பத்து நாட்கள் வரை தினமும் கொடுத்து வந்தோம். தாய்க்கும் ஸ்னேஹனத்திற்காக இதையே கொடுத்தோம். கர்ப்பிணிக்கும் கர்ப்பமும் தாயும் ஸமமான வளர்ச்சியும் ஆரோக்யமும் பெறுவதற்கு இதைக் கொடுத்தோம். எங்கும் நல்ல பலன் கிட்டியது. ஸந்ததஜ்வர (டைபாய்டு போன்றவை) த்திற்குப் பின்னர் ஆரோக்ய விருத்திக்காகவும் இதைக் கொடுத்தோம். குழந்தை பிறந்ததும் தாயின் ஆரோக்யக் குறைவால் சிசுக்கள் பலம் குன்றுவதைத் தடுக்க தாய்க்கு இதைக் கொடுத்தோம். எங்கும் நல்ல பலன் கிடைத்தது. பிறகு வாத பித்தகபங்களின் நிலையை அனுஸரித்து தெய் தேன் எண்ணெய் இவைகளின் அளவைக் கூட்டியும் குறைத்தும் உபயோகித்ததில் திரிதோஷ தத்துவத்தையே நன்கு அனுபவிக்கும் அளவிற்கு இதன் உபகாரம் புலப்பட்டது. இதன் பிறகு அமராவதியிலுள்ள ஆயுர்வேத தீர்த்த வைத்ய ஸ்ரீ திரியம்பகராவ்ஜீ கோகடே அவர்களும் அவரது மனைவியார் டாக்டர் ஈசதயாபாயிகோகடேயும் இதைத் தமது பிரஸவவிடுதியிலும் ஆரோக்யசாலையிலும் உபயோகித்து வருகிருர்கள். அவர்களது பரீக்ஷையில் அவர்கள் இது பொதுவான சிகித்ஸையிலும், சிசுக்களின் புஷ்டி சிகித்ஸையிலும் நோய் தடுப்பிலும்

பெருமளவில் உதவுவதாகக் கண்டிருப்பதாக எனக்கு எழுதி யுள்ளனர்.

இதன் பின் வமனம் விரேசனம் போன்ற பஞ்சகர்ம சிகித்ஸை களுக்கு முன்னர் செய்யவேண்டிய ஸ்னேஹன சிகித்ஸையாக முதல் தினம் இதில் 2 அவுன்ஸும், மறுதினமும் மூன்றுவது தினமும் 3 அவுன்ஸும் கொடுத்தோம், கக்குவான் இருமல், குழந்தைகளுக்கு வரும் இழுப்பு இவைகளில் தோஷசுத்தி புஷ்டிக்காக இதை உபயோகித்தோம்

இன்னும் பலர் தமது அனுபவத்தை எனக்கு எழுதி யுள்ளனர். வைத்ய ஸ்ரீ G. P. காமத்தும் வைத்ய ஸ்ரீமதி கமலா பாயிகாமத்தும் எழுதியுள்ள கீழ்கண்ட அனுபவக் குறிப்பு மிக வும் கவனிக்கத் தக்கது. "சில விஷயங்கள் முதல் பார்வையில் அல்பமாகத் தோன்றும். ஆனால் அனுபவத்தில் அதன் பலன் நல்ல முறையில் காணும். பரமௌஷதக் கலவை இத்தகையது. இவை வீட்டில் ஸஹஜமாகக் கிடைக்கும் பொருள்கள். வாத பித்த கபங்களின் விஷம நிலையில் இவை ஔஷதமாகவோ உண வாகவோ அனுபானமாகவோ ஏற்கப்படுபவை. தோஷங்களை இளக்கி வெளிப்படுத்துவதை முக்கியமாகக் கொள்ளாதவையும் தோஷங்களைக் கிளப்பி விடாதவையும் விஷம நிலையிலுள்ளவை களை ஸம நிலைக்குக் கொணருபவையுமான ஔஷதங்கள் சமன ஔஷதங்கள் எனப்படுகின்றன. பரமௌஷதம் இவ்வகுப்பைச் சார்ந்தது. அக்னி மந்தமோ தீக்ஷ்ணாக்னியோ ஏற்பட்ட நிலையில் பரமௌஷதம் நன்கு உதவுகின்றது. வயிற்றில் புளிப்பு மிகும் போது அக்னிசக்தியைச் சரி செய்தும் குறைத்தும் மந்தாக்னி யில் அக்னிசக்தியைத் தூண்டியும் உதவுகின்றது. ஆக இது அக்னி சக்தியைக் கட்டுப்படுத்திச் சமநிலையில் ஸ்திரப்படுத்து வதில் சிறந்து விளங்குகின்றது."

"பரமௌஷதம் உணவு, மருந்தும் கூட. இத்துடன் பால் முதலிய எந்த உணவுப் பொருளையும் சேர்த்துக் கொள்ளலாம். சிலர் நல்ல பசி இருந்தும் நன்கு சாப்பிட்டும் புஷ்டி ஏற்படாமல் இருக்கின்றனர். இவர்களுக்கு ஸ்தூலமான கோஷ்டாக்னி நன்கு இருக்கும். ஸூக்ஷ்மாக்னியான தாத்வக்னி சரியே இருக்காது. தைலகிருதமதுயோகம் விகாசியானபடியால் (உள் தாதுக்களிலே பரவி ஸ்ரோதஸ்களை சுத்தி செய்து வியாபிக்கும் சக்தியுள்ள படியால்) தாத்வக்னியும் சரியாகி புஷ்டி ஏற்படுகின்றது."

"மார்புக்கூடு முன்கூடி எலும்புகளின் சக்தி குறைந்து காணும் சிசுக்கள், அகாலத்திலேயே கிழத்தனம் அடைந்தவரலி பர்கள், மண் தின்பதால் ஏற்படும் சோகை, இழைப்பு க்ஷயம் இவை களில் நல்ல குணம் தருகிறது. [illegible] வவிடுதியில் பிறந்த

1888 17 சென்னை-600 0

இரட்டைக் குழந்தைகளில் ஒன்று 3 பவுண்டும் மற்றொன்று 2¾ பவுண்டுமிருந்தது. தானே தாய்ப்பாலைச் சாப்பிட முடியாத நிலையில் வெளி உணவைக் கொடுத்தால் ஏற்குமோ என்ற சந்தேகத்தின் பேரில் பரமௌஷதம் கொடுத்ததும் நனகு பலம் தந்து குழந்தைகள் விரைவில் புஷ்டியடைந்தன."

மற்றொரு இரட்டை பிரஸவம் 8 வது மாதத்திலேயே ஏற்பட்டதனால் இரண்டும் குறைந்த எடையில் வெளிப்பட்டன. இரண்டும் எடையில் ஒன்றாகத்தானிருந்தன. அதில் ஒன்றுக்கு மாத்திரம் பரமௌஷதம் கொடுத்ததில் 10 நாட்களுக்குள் அதன் எடை ¼ பவுண்டு கூட ஆனது."

"ஒரு கர்ப்பிணிக்கு உடல் நிலை மிகவும் துர்பலமடைந்து அவள் நகரவோ உட்காரவோ நடக்கவோ முடியாமலிருந்தாள். பட்டினி கிடந்து வாடியிருந்ததால் ஏற்பட்ட களைப்புதான் காரணம். பிரஸவ விடுதியில் சேர்த்தபின் தொடர்ந்து பரமௌஷதம் ஒரு டீஸ்பூன் கொடுத்து வந்ததில் 2-3 நாட்களுக்குள் பசி நன்கு ஏற்பட்டு முகம் தெளிவடைந்தது. பிறகு கிரமமாக அளவை 2-3 டீஸ்பூன் வரை அதிகப்படுத்தியதில் தென்பு ஏற்பட்டு நடமாட்டம் ஏற்பட்டு பிரஸவமும் ஸுகமாக ஆகியது. தாதுபுஷ்டிக்கு இதை நன்கு உபயோகிக்கலாம்."

ஸ்ரீ காமத்தின் இவ்வபிப்பிராயங்கள் ஒவ்வொரு வைத்யராலும் அனுபவிக்கத் தக்கவை. இவை தனிப்பட்ட நெய் தேன் நல்லெண்ணெய் இவைகளின் சேர்க்கையாலானவையே. இவைகளையே வியாதிக்கேற்றவாறு தயாரிக்கப்பட்ட தைலகிருதங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டால் குணம் அபரிமிதமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. — ஸசித்ர ஆயுர்வேத.

ஸ்ரீரங்கம் லக்ஷ்மீ ப்ரஸந்ந ஸ்ரீ வெங்கடேச ஆயுர்வேத
தர்ம வைத்யசாலை. ஸ்ரீரங்கம்.

மே மாதத்தில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.

ஆண்கள்	789	2056
பெண்கள்	678	
சிறுவர்	589	

நிர்வாஹஸ்தர்,
M. V. கிருஷ்ணமூர்த்தி ராவ்,
B. A., B. L., அட்வகேட்,
ராயபாளையம் எஸ்டேட்.

பாலசிகித்ஸா— பிழை திருத்தம்.

சென்ற இதழில் வெளியான ரக்தவாத சிகித்ஸையில் கடைசியிலுள்ள காரஸ்கர கிருதத்தில் சேராங்கொட்டைக்குப் பதிலாக எட்டிக்கொட்டை என்று திருத்திக் கொள்ளவும்.

ரக்தாநவஸ்தா ரோகம்.

வாதரக்த நோயின் வகையைச் சேர்ந்த 18 நோய்கள் ரக்தாநவஸ்தை என்ற பெயரில் ஹாரீதரால் குறிப்பிடப் பட்டுள்ளன. இவை பாலர்களுக்குத் தான் விசேஷமாக ஏற்படுகின்றன என ஆசார்யர் இந்த விரிவுரை கூறுகிருர்.

இவை பின் வருமாறு —

நிஜரோகங்கள் — 9. அவையாவன:

வாதத்தால் ஏற்படுவது 3.

1. பாஹ்யம் - ரஸோத்க்லிஷ்டம். (நீர் வார்ப்பன்)
2. ஆந்தரம் - மாம்ஸோத்கிலிஷ்டம். (மாம்ஸவார்ப்பன்)
3. உபயம் - த்வந்த்வோத்கிலிஷ்டம். (ஈரடிவார்ப்பன்)

பித்தம் சேர்ந்த வாதத்தால் ஏற்படுவது 3

1. பாஹ்யம் - ஸைகதம் (மணல்வார்ப்பன்)
2. ஆந்தரம் - தர்துரம் (தவளைவார்ப்பன்)
3. உபயம் - கோடகம் (குதிரைவார்ப்பன்)

கபம் சேர்ந்த வாதத்தால் ஏற்படுவது 3.

1. பாஹ்யம் - கண்டகம் (முளைவார்ப்பன்)
2. ஆந்தரம் - சிருங்ககம் (இருமுடிவார்ப்பன்)
3. உபயம் - மல்லகம் (ஆணிவார்ப்பன்)

ஆகந்துகமாக ஏற்படுபவை 9. அவையாவன.

வாதத்தால் ஏற்படுவது 3.

1. பாஹ்யம் - ஆர்த்ரகம் (நணிவார்ப்பன்)
2. ஆந்தரம் - க்ஷோதகம் (பொடிவார்ப்பன்)
3. உபயம் - லாஜகம் (மலர்வார்ப்பன்)

பித்தம் சேர்ந்த வாதத்தால் ஏற்படுவது

1. பாஹ்யம் - சடகம் (குரிலடிவார்ப்பன்)
2. ஆந்தரம் - ஸூசிமுகம் (ஊசிவார்ப்பன்)
3. உபயம் – அங்காரகம் (எரிவார்ப்பன்)

கபம் சேர்ந்த வாதத்தால் ஏற்படுவது

1. பாஹ்யம் - க்ராவகம் (சரளைவார்ப்பன்)
2. ஆந்தரம் - மத்ஸ்யகம் (மீனடிவார்ப்பன்)
3. உபயம் - கோளம் (கோளவார்ப்பன்)

ரத்தாசயங்களில் வாயு கோபித்து ரத்தத்தை அங்குமிங்கும் தள்ளி ஓரிடத்திலும் ஸ்திதியற்று ஸஞ்சரிக்கச் செய்து இந்த நோய்களை உண்டுபண்ணுகிறது. இவை வாத ரத்தத்தின் வகையாகும். இவை தனிப்பட்ட வாயுவாலும் வாயுவும் பித்தமும் சேர்ந்தும் வாதமும் கபமும் சேர்ந்தும் உண்டாகும். இவை ரஸரத்தங்களிலுள்ள நீரில் மாத்திரம் கெடுதி விளைவித்தால் பாஹ்யமாகும். (வெளிப்புறத்தில் உண்டாவது.) தசையையும் பிடித்தால் ஆந்தரம் (உட்புறத்தில் உண்டாவது) ஆகும். இரு இடங்களிலும் தோஷகோபம் கண்டால் உபயகதம் எனப்படும். இவை சரீரத்தில் தோஷ கோபம் ஏற்பட்டுப் பிறகு இந்த லக்ஷணங்கள் உண்டானல் நிஜம் எனப்படும். எதிர் காற்று பனி, கடல் காற்று, கழுகு நிழல் படுவது, ஓணைப்பார்ப்பது, கழுதைச் சத்தம் கேட்பது, தேக்கையும் புரசையும் தொடுவது, இவை போன்றவைகளால் குழந்தைகளுக்கு தோஷம் ஏற்பட்டுப் பிறகு இந்நோய ஏற்படுபவை ஆகந்துகம் என்பர். இந்தப் பதினெட்டு வகையின் பெயர் முன்பு கொடுத்திருக்கிறது. அவைகளின் லக்ஷணமும் சிகித்ஸையும் பின்வருமாறு:—

ரஸோத்க்லிஷ்டம்: ரத்தாசயத்தில் வாயு கோபமடைந்து ரத்தத்தை வெளிப்புறமாக ரஸாயனமான தோலிற்குக் கொணர்ந்து ரத்தத்தைச் சிறிய சிறிய கோளங்களாக்கி அதைச் சுற்றி உலரச் செய்து மிளகளவில் வெளியில் வீக்கத்தை உண்டாக்கும். ரஸஸ்தானத்தை ஆக்ரமித்து அங்கு வீக்கம் உண்டாக்குவதால் ரஸோத்க்லிஷ்டம் எனப் பெயர். சில சமயம் பருத்தும் சில சமயம் வாடியும் காணும். விரலால் அழுத்த அமுங்கும்.

ஏகநாயகத்தின்வேர் மேல்பட்டையை மோர் விட்டரைத்துத் தடவ நல்லது. விருச்சிவேர்பட்டையையும் மான் கொம்பையும் துளசிச்சாற்றில் இழைத்துப் பூசலாம். இந்த இரண்டு லேபமும் எல்லா நிஜ ரக்தாநவஸ்தையிலும் நல்லது. மயிலெள்ளுச்செடித் தண்டின் மேல் தோலை அரைத்துப் பூசுவது நிஜ - ஆகந்துக நிலைகள் எல்லாவற்றிலும் நல்லது.

கடுக்காய், நன்னரிக்கிழங்கு, மாகாளிக்கிழங்கு, மூக்கரட்டை வேர், ஏகநாயகத்தின் வேர். புத்தரிச்சுண்டைவேர் மேல்பட்டை, வேப்பம்பட்டை, விருச்சிவேர்பட்டை இவைகளைக் கஷாயம் வைத்து இந்துப்பு சர்க்கரை அல்லது தேன் சேர்த்துக் காலை மாலைகளில் சாப்பிடலாம்.

மயிலெள்ளின் தோல், சிற்றுமுட்டிவேர், தேவதாரு, தண்ணீர் விட்டான் கிழங்கு, சிந்திற்கொடி, மருதம்பட்டை, சதகுப்பை, வில்வவேர், கோரைக்கிழங்கு, கடுக்காய், நன்னரிவேர், நீர்முள்ளி வேர், மூக்கரட்டை வேர், மரமஞ்சள், ஆடாதோடை வேர், கருங்

குறிஞ்சிவேர் இவைகளைக் கஷாயமிட்டு, இந்துப்பும் தேனும் சேர்த்துச் சாப்பிடவும். வாத விஸர்ப்பத்தில் சொன்ன தைலங்களை தலைக்கும் உடம்பிற்கும் தேய்த்துக் குளிக்கவும்.

மாம்ஸோத்க்லிஷ்டம். ரத்தத்திலுள்ள தோஷம் வெளிமுகமாக வெளிப்படாமல், தசைகளுக்குள்ளே மண்டலம் மண்டலமாக ஆகி வெளியில் விரலினால் அழுத்தினாலும் ஸ்பஷ்டமாகத் தெரியாமல் ஊஹிக்கக் கூடிய அளவில் சிவந்து ஜ்வரம், பூட்டுகளில்வலி, தலைவலி, கண்ணீர் மிகுந்து வடிதல், கண்களுக்கெதிரே சிவந்த மண்டலங்கள் காணும். மாம்ஸங்கள் சுருங்கிக் குறையும். எல்லா அங்கங்களிலும் அரிப்பு இவை காணும்.

நன்னாரி, வெட்பாலையரிசி, சிறுகாஞ்சூரிவேர், மூக்கரட்டைவேர், சந்தனம், செஞ்சந்தனம், மரமஞ்சள், நெரிஞ்சில்முள், ஆமணக்குவேர், ஏகநாயகத்தின்வேர் இவைகளின் கஷாயம் சர்க்கரை தேன் சேர்த்து 7 நாள் கொடுக்கவும். சீந்திற்கொடி, நீர்முள்ளிவேர், அரசின் துளிர், வேப்பம்பட்டை, சித்தரத்தை, மூக்கரட்டை, மரமஞ்சள், நிலவேம்பு, கடுகுரோகிணி, செவதைவேர், திரிபலை, காஞ்சூரிவேர், பெரிய நாயுருவிவேர் இவைகளைக் கஷாயம் வைத்து சர்க்கரை தேன் சேர்த்துச் சாப்பிடவும். முன் கஷாயத்தைவிட குணமதிகம். தலைக்கும் உடலுக்கும் தைலம் முன் போல. ஸ்னானத்திற்காக தேங்காய் எண்ணெய்யில் அருகம்புல், மயிலெள்ளுத்தண்டின் மேல் தோல் சேர்த்துத் தயாரித்து தைலம் உபயோகிக்கலாம்,

ஒரு வருஷத்திற்குட்பட்ட பாலனுக்கு வந்தால் அஸாத்தியம். மூன்று வருஷத்திற்கு முற்பட்டேற்பட்டால் கஷ்டப்பட்டு சிகித்ஸை செய்யலாம். அதற்கு மேற்பட்ட வயதில் ஏற்பட்டால் ஸாத்யமே.

த்வந்த்வோத்கிலிஷ்டம். முன் கூறிய இருவகை நோய்களின் லக்ஷணமும் கண்டு, ரஸமும் மாம்ஸமும் கெட்டு வரும்போது வயிற்றில் வீக்கம், கடும் மலபந்தம்ஏற்படும், இந்த வயிற்று வீக்கம் பரந்து சட்டியின் அடிபோல இருந்தால் ஸாத்யம். எருதின் திமில் போல நடுவில் உயர்ந்து கூராகக் கண்டால் அஸாத்யம். எல்லா வகையிலும் வயிற்றிலுள்ள நீர் மிகுந்து வயிற்று உப்புசம் ஏற்படின இந்த அடையாளங்களைக் கொண்டு ஸாத்ய - அஸாத்ய நிர்ணயம் செய்ய வேண்டும்.

ஆவல் துளிர், சிறுகாஞ்சூரிவேர், மூக்கரட்டைவேர், அருகம்புல், புத்தரிச்சுண்டைவேர் பட்டை, பேய்ப்புடல், தேவதாரு, சீந்திற்கொடி, கொத்துமல்லிவிதை இவைகளின் கஷாயம் இந்துப்பும் சர்க்கரையும் சேர்த்துச் சாப்பிட நல்லது. சிற்றாமுட்டி வேர், ஆற்றுவஞ்சித்தோல், கோரைக்கிழங்கு, முள்ளுக்கத்திரிவேர்,

தேவதாரு, வட்டத்திருப்பி, ஓமம், திரிபலை. முருங்கைப்பட்டை, மூக்கரட்டைவேர், ஆடாதோடைவேர், நெரிஞ்சில்முள், தண்ணீர் விட்டான் கிழங்கு, கரிக்கொடிக் கிழங்கு, ஏகநாயகத்தின் வேர், மஞ்சள், மரமஞ்சள், முன்னைவேர், திப்பிலி இவைகளைக் கஷாயம் வைத்து ஜீரகத்தூள் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட நாள்பட்ட நோயும் தீரும்.

மாவிலங்கம்பட்டை, சிற்றுமுட்டிவேர், விலாமிச்சைவேர், தேவதாரு, தண்ணீர்விட்டான் கிழங்கு இவைகளின் கஷாயம்; ஏகநாயகத்தின்வேர் சாறு, சித்தரத்தை, மூக்கரட்டைவேர், கோரைக் கிழங்கு, ஏலரிசி, திரிபலை, சிற்றுமுட்டி, பேராமுட்டி, நன்னாரி, கோஷ்டம், அதிமதுரம், மஞ்சிட்டி, சந்தனம், செஞ்சந்தனம், மயிலெள்ளின் தோல், மஞ்சள், மரமஞ்சள், சோம்பு, கச்சோரம், முத்துச்சிப்பி, மாகாளிக்கிழங்கு, நிலவேம்பு, தூணியாங்கம், இந்துப்பு, குக்கில், இவை கல்கம்; தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய், இவைகளைத் தைலமாகக் காய்ச்சி, உடலில் தேய்த்து ஸ்நானம் செய்யவும். வாதவிஸர்ப்பத்தில் கூறப்பட்டுள்ள தைலமும் ஸ்நான ஜலமும் இங்கு உபயோகிக்கவும்.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம், குங்குமப்பூ முதலியவைகளுக்கு நம்பிக்கையான இடம்

BHANOT BROTHERS.

(REGD)

Wholesale Musk Saffron and Indian Drugs Merchants.

LUDHIANA. PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்.

நெ.		ஸம்ஸ்க்ருதப்பெயர்	தமிழ் விவரணம்	ஆங்கிலப் பெயர்
237	कालीयकं कालेयकं	காலீயகம் காலேயகம்	அக்ன்யாசயம்	Pancreas
238	किट्टं	கிட்டம்	வெளியேற்ற வேண்டிய அழுக்கு	Waste
239	कीलकौ	கீலகம்	தோள்வளை எலும்புகள்	Clavicles
240	कुकुन्दरौ	குகுந்தரம்	1) இடுப்பெலும்பின் மேல் பாகம் 2) இடுப்பெலும்பின் முட்டு மர்மம்	1) Highest curve of the iliac crest 2) Ischial tuberosities
241	कुक्षिः	குக்ஷி	வயிறு	Abdomen, Fank.
242	कुक्षिगोलकौ	குக்ஷிகோலகம்	மூத்திரக்குண்டிக்காய்	Kidneys, Renes,
243	कुचौ	குசம்	ஸ்தனங்கள், பாலூறும் கிரந்திகள்	Breasts, Mammary glands
244	कुटकास्थिः	குடகாஸ்தி	முதுகெலும்பின் அடியிலுள்ள இரு எலும்புகள்	Coccyx or Sacrum Coccyx
245	कुटिलासिरा	குடிலாஸிரா	சுருண்ட ரத்தக் குழாய்	Varicose vein
246	कुण्डलानि	குண்டலம்	குடலின் சுழல்	Coils of intestine

எ.		ஸம்ஸ்க்ருதப் பெயர்	தமிழ் விவரணம்	ஆங்கிலப்பெயர்
247	कुंभः	கும்பம்	1) வயிறு - மார்பகத்திலுள்ள ஆசயங்கள் 2) உள்ளே வெற்றிடமுள்ள உறுப்புகள். 3) வயிறு	1. Thoroco - Abdominal cavity. Alimentary Canal 2. Visceras hollow organs. 3. Abdomen
248	कुहणिका	குஹணிகா	முழங்கை	Elbow
249	कूपकं	கூபகம்	மயிர்க்கால்	Hair follicles
250	कूर्चाः	கூர்ச்சம்	1) பிரஷ்போன்ற பல நுனியுள்ள தசைநார்கள். (உள்ளங்கை - உள்ளங்கால் போன்ற இடங்களில் உள்ளது.)	Brush like fibrous or membranous structures. Palmer and Planter aponeuroses, Liganemtum nuchae etc.
			2) நௌகிபம், கூர்ச்சசிரம் என்ற குதிகால் முன்னுள்ள இரும்பு எலும்புகள்	Navicular & Talus, Bones

நெ.	ஸம்ஸ்க்ருதப் பெயர்		தமிழ் விவரணம்	ஆங்கிலப் பெயர்
	कूर्चाः	கூர்ச்சம்	3) உள்ளங்காலுக்கு மேல்புறம் விரல்களின் வேரெலும்புகளை ஒட்டியுள்ள கோணகம் என்ற மூன்றெலும்புகளும் நௌகிபம் கூர்ச்சசிரமும்.	Three cunciforms cuboid and navicular
			4) இவைகளிலுள்ள மர்மஸ்தானம்	
251	कूर्परः	கூர்பரம்	முழங்கை	Elbow
252	कूर्परास्थि	கூர்பராஸ்தி	முழங்கை முண்டு	Olecranon process.
253	कृकाटिका	கிருகாடிகா	கழுத்தின் முன்புறமுள்ள முண்டு	Laryngeal Prominence (Adam's apple)
254	कृष्णतारका	கிருஷ்ணதாரகா	கருவிழி	Iris
255	कृष्णदृष्टिगतः सन्धिः	கிருஷ்ணதிருஷ்டி-ஸந்தி	கருவிழியும் பாப்பாவும் சேருமிடம்	Pupillary border. Contact of the iris with the lens
256	कृष्णमण्डलं	கிருஷ்ணமண்டலம்	கருவிழி	Iris
257	केशाः	கேசம்	தலைமயிர்	Hairs on the head.
258	केशाग्र	கேசாக்ரம்	தலைமயிர் நுனி	Ends of the hairs

வெ.		ஸம்ஸ்க்ருதப் பெயர்	தமிழ் விவரணம்	ஆங்கிலப் பெயர்
259	केशान्तः	கேசாந்தம்	தலைமயிர் வளருமிடத்தின் எல்லை	Boundary, where the hairs end
260	केशभूमिः	கேசபூமி	தலைமயிர் வளருமிடம்	Field of the hairs,
261	कोटरः	கோடரம்	பள்ளமான இடம் (கண் அமைந்துள்ள இடம் முதலியது)	Orbit or orbital cavity
262	कोरसन्धयः	கோரஸந்தி	அதிக அசைவுள்ள எலும்புகளின் பூட்டுக்கள்	Condyloid and Hinge joints
263	कोशः	கோசம்	1) பை போன்று உறுப்பு	Sac
			2) அண்டகோசம்	Scrotum
			3) ஆண்குறியின் நுனியிலுள்ள தோல்மூடி	Perpuce
264	कोष्ठः	கோஷ்டம்	கும்பம் - பார்க்கவும்	
265	कोष्ठकं कोष्ठकास्थिः	கோஷ்டம் கோஷ்டகாஸ்தி }	தோள்வளை எலும்பு	Clavicle

யோகரத்நாகரம்.

அர்சோரோகம்

நிதானம்

அரி (எதிரி) போல முளைத்த முளைகள் மனிதனை உடனிருந்தே உபத்ரவப்படுத்துவதாலும் குத வழியைத் தடுத்து வேதனையை ஏற்படுத்துவதாலும் அர்சஸ் எனப் பெயர் ஏற்பட்டது. வாதார்சஸ், பித்தார்சஸ், கபார்சஸ், ஸந்நிபாதார்சஸ், ரக்தார்சஸ், ஸஹஜ (பிறவியிலேயே ஏற்பட்ட) அர்சஸ் என ஆறு வகைப்படும். குதவாயின் கடைசி மூன்று மடிப்புகளில் இது ஏற்படுகின்றது. வாத பித்த கபங்கள் சீர்கேடடைந்து குதவழியிலுள்ள தோல், தசை, மேதஸ் இவைகளைக் கெடுத்து பல உருவங்களில் மாம்ஸ முளைகளை ஏற்படுத்துகின்றன.

காரணம்: துவர்ப்பு, காரம், கசப்பு, வரட்சி, குளிர்ச்சி மிக்க உணவு, லகுபாகமடையும் உணவு, அளவில் மிகக் குறைந்த உணவு, கடும் மத்யம், அதிமைதுனம், அதிகப்பட்டினி, சீததேசத்தில் சீதகாலத்தில் அதிகவாஸம், அதிகத் தேகப் பயிற்சி, மனவருத்தம், கடுங்காற்றிலும் வெயிலிலும் அடிபடுதல் இவை வாத அர்சஸ்ஸிற்குக் காரணமாகின்றன.

காரம், புளிப்பு, உப்பு, சூடு மிக்க உணவு அதிகம் ஸேவித்தல், கடும் தேகப்பயிற்சி, நெருப்பு புகை, வெயில் வெளிச்சம் இவைகளை அதிகமாகக் கொள்ளுதல், உஷ்ண தேச - கால வாஸம், கோபம், மத்ய ஸேவை, அஸூயை, மனப்பான்மை மிகுந்திருத்தல், காரம், சூடு மிகுந்த பான - உணவுகள் இவை பித்த பிரதானமான அர்சஸிற்குக் காரணமாகின்றன.

இனிப்பு, நெய்ப்பு, குளிர்ச்சி, உப்பு புளிப்பு, குருத்தன்மை மிகுந்த உணவு, தேகப்பயிற்சியின்மை, பகல் தூக்கம், படுக்கையிலும் ஆஸனத்திலும் அதிக விருப்பத்துடன் சோம்பிக் காலம் கழித்தல், கீழ்காற்றில் ஸஞ்சரித்தல், குளிர்ந்த தேசமும் காலமும், கவலையற்ற தன்மை இவை கபப்பிரதானமான அர்சஸிற்குக் காரணமாகின்றன.

இவைகளிலேயே இரண்டு மூன்று தோஷங்கள் கெடுவதற்குக் காரணமானவைகளைச் சேர்ந்து ஸேவிக்கும் போது ஸம்ஸர்க்க (இரண்டு தோஷச் சேர்க்கை) த்தாலும் ஸந்நிபாத (மூன்றுதோஷச்சேர்க்கையாலும்) அர்சஸ் உண்டாகிறது.[1]

பூர்வருபம்: மலக்கட்டு. அங்க பலவீனம், வயிற்றுப் பொறுமல், இளைப்பு, ஏப்பமிகுதி, துடைவலுவிழத்தல், பலக்குறைவு, கிரஹணியோ, பாண்டுவோ, உதரமோ ஏற்பட்டிருப்பதாக ஒரு ஸந்தேகம் இவை முன்னறிவிக்கும் குறிகளாகும்.

குறிகள். — வாதார்சஸ்: வாதம் மிகுதியால் ஏற்படும் முளைகள் காய்ந்து வரண்டு எரிச்சலுடன் காணும். வாடிக் கருத்தும் சிவந்தும் உணர்ச்சியற்று மறத்தும், தடித்தும், கடினமாயும் பிசிபிசிப்பற்று சொரசொரப்புடனும் காணும். முளைகளில் ஒன்றுக்கொன்று உருவில் வேற்றுமையுடனிருக்கும். நுனி வளைந்து கூராக வாய்வெடித்து இருக்கும். கோவை ஈச்சை பேரீச்சை பருத்தி இவைகளின் காய்போலும், கடுகுபோலும், கதம்ப (அடப்பம்) புஷ்பம் போலும் இருக்கும். தலை, விலா, தோள், இடுப்பு, துடை, கவிட்டி இவைகளில் கடுப்புவலி அதிகமாக இருக்கும். தும்மல், ஏப்பம், மலக்கட்டு, மார்பிடிப்பு, அருசி, இருமல், ச்வாஸம், அக்னிமந்தம், காது இரைச்சல், தலை சுற்றல் இவைகள் ஏற்படும். வாதார்சஸால் உபத்திரவப்படுபவனுக்கு முடிச்சு முடிச்சாகவும் கொஞ்சம் கொஞ்சமாகவும் சத்தத்துடனும் முக்கலுடனும் வலி நுரை சிதத்துடனும் கெட்டியான மலம் வெளியாகும். தோல், நகம், மலம், மூத்திரம் கண், வாய் இவைகளில் கருமை காணும். இதன் உபத்திரவமாக

---

1. ***இந்நோய் ஏற்பட முக்ய காரணங்கள்.*** மத்யம் நிறைய சாப்பிடுவது, குந்தி உட்காருவது, மேடுபள்ள முள்ள கடினமான ஆஸனத்திலும் வெறிபிடித்த யானை குதிரை முதலிய வாஹனங்களிலும் உட்காருவது, ஒட்டகை ஏறுவது, அதிகமைதுனம், எனிமா கொடுக்கும் போது அதன் யந்திரத்தைச் சரியாக வைத்துக் கொள்ளாமை, இவைகளால் குத மடிப்புகளில் ஏற்படும் புண், உடை புல் பூண்டு முதலியவை குதமடிப்புகளில் உராய்வது, கீழ்வாயு - மூத்திரம் - மலம் இவைகளின் வேகத்தை (அது உண்டாகாத போதே) முக்கி முக்கி வெளிப்படுத்துதல், வந்த வேகத்தை அடக்குதல், ஸ்திரீகளுக்கு கர்பஸ்ராவம் போன்ற கர்ப்பபீடைகள், பிரஸவத்தில் ஏற்படும் கோளாறுகள், இவைகளால் அபான வாயுவின் வேகம் தடைப்பட்டு சிர் கெட்டு மலத்தை இருக்கி குதமடிப்புகளில் அழுத்தம் அதிகமாகி இந்த நோயை உத்பத்தி செய்கின்றது.

இவை சுஷ்கமென்றும் ஆர்த்ரமென்றும் இரண்டுவகை. வாதார்சஸும் கபார்சஸும் சுஷ்கார்சஸ். இவைகளில் கசிவு அதிகமில்லை. ரக்தார்சஸும் பித்தார்சஸும் ஆர்த்ரம், இதில் கசிவு மிகுதி. — சரகர்.

குல்மம், மண்ணீரல் பெருக்கம், உதரம், அஷ்டீலை நோய்கள் ஏற்படலாம்.

பித்தார்சஸ். பித்தம் மிகுந்திருப்பதால் ஏற்படும் அர்சஸில் முளைகள் வாய் நீலமாகவும் சிவந்தும் மஞ்சளாகவும் வெளுத்தும் காணும். மெல்லிய ரத்தக் கசிவும் நாற்றமும் ஏற்படும். முளைகள் மெல்லியதாகவும் மெதுவாகவும் தளர்ந்தும் காணும். கிளி மூக்கு, கல்லீரல், அட்டையின் வாய் போன்று அமைந்திருக்கும். எரிச்சல், பாகம், ஜ்வரம், வியர்வை, தாகம், மூர்ச்சை, பரபரப்பு, மயக்கம் இவை காணும். ஆவியுடன் திரவமாகவும் நீலமாகவும் மஞ்சளாகவும் சிவந்தும் உஷ்ணமாக ஜீர்ணமாகாத மலம் வெளியாகும். யவை போன்று முளைகளின் நடுபாகம் பருத்துக் காணும். தோல் நகம் முதலியவை மஞ்சளாகவும் சிவந்தும் காணப்படும்.

கபார்சஸ்:— கபம் மிகுதியால் ஏற்படும் அர்சஸில் முளைகள் அடிபருத்தும் தடித்தும் வலி மந்தமாகவும் வெளுத்தும் உயர்ந்தும் அகன்றும் நெய்ப்புடனும் உருண்டை வடிவுடனும் கனத்துடனும் திடமாகக் காணும். பிசிபிசிப்பும் வழவழப்பும் அரிப்பும் காரணமாக விரல்களால் நெரடும் போது இதமாக இருக்கும். மூங்கில் குருத்து, பலாக்கொட்டை, மாட்டின் மடிக்காம்பு போன்ற உருவத்திலிருக்கும் கவுட்டியில் புடைப்பு, குதவாய், பஸ்தி, தொப்புள் இவைகளை உள்ளிழுப்பது போன்ற உணர்ச்சி காஸம், ச்வாஸம். உமட்டல், வாயில் ஜலம் ஊறுதல், அருசி, பீனசம், மூத்ரகிருச்சிரம், தலைகனம், குளிர்ஜ்வரம், நபும்ஸகத்தன்மை, அக்னிமந்தம், வாந்தி, அஜீர்ணம் இவை உபத்திரவமாக ஏற்படலாம். கொழுப்பு, கபம் மிகுதியான மலம் முக்கி வெளியாகும். முளைகளில் வெடிப்போ கசிவோ ஏற்படாது. தோல்கள் முதலியவை வெளுத்துக் காணும்.

ஸந்நிபாதார்சஸ் – ஸஹஜார்சஸ்[1] மூன்று தோஷங்களாலும் ஏற்படுவதிலும் பிறவியிலேயே ஏற்படுவதிலும் மூன்று தோஷங்களின் லக்ஷணம் காணப்படும்,

---

1. **ஸஹஜார்சஸ் — லக்ஷணம்.** மிகவும் கஷ்டப்பட்டு பார்க்கத் தக்கவைகளாயும் வெளுத்தும், தொட்டால் கரகரப்புடனும், உள்பக்கம் முகமுள்ளதாயும் காணும். இந்நோயாளி மிகவும் இளைத்தும் கம்மின பேச்சுடன், பசி குன்றியிருப்பான், சுக்கிலம் க்ஷீணித்து உடல் முழுதும் பச்சை நரம்போடியிருப்பான். குழந்தைகள் ஏற்படாது. கோபம் மிகுதியாகக் காணும். உடைந்த வெங்கலம் போன்று பேசுவான். தலை கண் காது மூக்கு இவைகளில் அடிக்கடி நோய்கள் ஏற்படும். ஹிருதயத்தில் கபலேபம் ஏற்பட்டு நோய் உண்டாகும்,

— பாவப்ரகாசம்,

ரக்தார்சஸ்: — ரத்தமும் கெடுவதை முக்ய காரணமாகக் கொண்டு ஏற்படும் அர்சஸில் முளைகள் பித்தார்சஸின் லக்ஷணங்களுடன் காணப்படுகின்றன. ஆலம்விழுது, குந்துமணி, பவழம் போன்ற நிறத்திலும் உருவத்திலும் ஏற்படுகின்றன. மிகவும் உஷ்ணத்துடன் இறுகிய மலம் போகும் போது உடன் ரத்தம் மிகுந்த அளவில் வெளியாகி, ரத்த க்ஷயத்தால் உடல் தவளை போன்று வெளுத்து நிறம் பலம் உத்ஸாஹம் காந்தி இந்திரியங்களின் வலு மிகவும் குறைந்து விடும். மலமும் கருத்து இறுகி வரண்டு கெட்டியாய் வெளியாகும். கீழ்வாயு சரியாக பிரிந்து வெளியாகாது.

ரத்தார்சஸில் ரத்தம் மெல்லியதாகவும் சிகப்பாகவும் நுரையுடனும் வெளிப்பட்டு இடுப்பு துடை ஆஸனவாய் இவைகளில் வலியும் துர்பலமும் ஏற்பட்டிருந்தாலும் இந்த நோய் வரண்ட உணவுப் பொருள்களை அதிகம் ஏற்பதால் உண்டாகியிருந்தாலும் இதில் வாதத்தின் சேர்க்கை மிகுந்துள்ளதை அறிய முடியும்.

மலம் தளர்ந்து வெண்மை கலந்த மஞ்சள் நிறத்தில் பிசிப்புடன் கனமாக குளிர்ச்சியுடன் வெளியாகி, ரத்தமும் நூல் நூலாக உரைந்து பிசிப்புடன் வெளியாகியும், குதமும் பிசிபிசிப்புடன் மறத்து காணப்பட்டாலும் அங்கு கபத்தின்சேர்க்கை மிகுந்துள்ளதை அறிய முடியும்.[1]

அர்சஸ் நோயில் பொதுவாக பிராணன் முதலிய ஐந்து வாயுக்களும் பித்தமும் கபமும் சேர்ந்தே கோபமடைவதன் காரணமாக கஷ்டமளிப்பதாயும் பல உபத்ரவங்களை உண்டு பண்ணுவதாயும் சரீரத்தின் எல்லா பாகங்களையும் பீடிக்க வல்லதாயும் சிகித்ஸைக்கு மிகவும் கஷ்டப்பட்டு உட்படுபவையாயுமிருக்கும். ஆனால் முளைகள் வெளிமடிப்பில் மாத்திரம் ஏற்பட்டும் ஏதாவது ஒரு தோஷத்தின் சீர்கேட்டை முக்யமாகக் கொண்டு ஏற்படுவதாயும் நாட்படாததாயும் உள்ள அர்சஸ் எளிதில் சிகித்ஸைக்கு வசப்படும். இருமடிப்புகளில் தொடர்புள்ளதும் இரு தோஷங்கள் கெடுவதால் ஏற்படுவதும் ஒரு வருஷத்திற்கு மேற்பட்டதுமானது சிகித்ஸைக்கு மிகவும்

1. ரத்தார்சஸில் ரத்தம் மிகுதியாக வெளிப்பட்டால், தலையில் கொதிப்பு, கண் இருளுதல், பொட்டையாகுதல், அபிமந்தம், திமிரம் என்ற கண்ணோய்கள், தாது க்ஷயம், ஆக்ஷேபகம், பக்ஷவாதம், ஏகாங்கவாதம், நாவரட்சி, எரிச்சல், விக்கல், காஸம், சுவாஸம், பாண்டுரோகம் இவைகளை ஏற்படுத்தி உடலை அழிக்கும். — ஸுச்ருதர்.

183877

வாரியர்

க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிசவாயு முதலிய எல்லாவிதமான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப்பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துக்கள்—தசை நார்களில் வலி, வீக்கம், கை, கால் வலி முதலிய எல்லா விதமான நோவுகளையும் நிச்சயமாக குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல் கண்—காது கோளாறுகள், ஒருத்தலை வலி, முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் (பிளட் பிரஷர்) என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கு வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும், விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்தி குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை: 1 அவுன்ஸ் ரூ. 5-8-0 1/2 அவுன்ஸ் ரூ. 2-14-0.

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனா பஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

(1936-ல் நிறுவப்பட்டது.)

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்குகளுக்கு எழுதினால் இனாமாக அனுப்பப் பெறும்.

'மார்த்தண்ட'வின் ஆயுர்வேத இஞ்சக்ஷன்கள்.

சீக்ரத்தில் குணமளிக்கும்

இந்த எட்டு வித இஞ்சக்ஷனைக் கவனியுங்கள்!

நவீன ஸம சீதோஷ்ண வசதியும் புதிய இயந்திரங்களும் அமைந்த 'மார்த்தண்ட' மருந்து தயாரிப்பு சாலையில் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்று தகுதி வாய்ந்த ரஸாயனிகளால் தயாரிக்கப் பெற்ற எட்டு வகை இஞ்சக்ஷன்களான **ஸோமா** ச்வாஸகாஸங்களிலும், **சூலாந்தக** எல்லா வாயு வலிகளிலும், **ஸ்ம்ருதிதா** உன்மாத மூர்ச்சைகளிலும், **ஹ்ருதயாம்ருத** ஹ்ருதய பலஹீனத்திலும், **தாபீகர** ஜன்னி ஜல தோஷங்களிலும், **மருதாசீ** வாதரோகங்களிலும், **ப்ரதராரி** பெரும்பாட்டிலும், **க்லீபாந்தக** நபும்ஸகத்திலும் உடனே ஆச்சர்யமாய் குணமளிக்கின்றன. இவைகளை ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள். ஆராய்ச்சிக்காகப் பயன்படும் படங்களடங்கிய **மார்த்தண்ட** மாதப் பத்ரிகையை இலவசமாகப் பெறுங்கள். இவை தவிர ஆஸவம் அரிஷ்டம் பஸ்மம் சூர்ணம் முதலியவைகளும் சாஸ்த்ரீய முறை தவறாது தயாராகின்றன. கடிதங்கள் ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதுங்கள்.

MARTAND PHARMACEUTICALS,
(Research Institute of Indian Medicines)
BARAUT S. S. Rly, (U. P.)

தி இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட் X 185

லேட்டிஸ் பிரிட்ஜ்ரோட், அடையாறு, மதராஸ் 20.

தபால் பெட்டி நெ. 907. போன் நெ. 71628.

ப்ரஸிடெண்ட் :— வைத்யரத்ன, கேப்டன்
G. ஸ்ரீநிவாஸமூர்த்தி, பி. ஏ., பி. எல்., எம். பி. லி. எம்.

வைஸ்பிரஸிடெண்ட் :—
டாக்டர் Y. சூர்யநாராயண ராவ், எல். ஐ. எம்.

அங்கீகரிக்கப்பட்ட பங்குத் தொகை :—		ரூ.	100,000
(பங்கு ஒன்றுக்கு ரூ. 5 வீதம் 20,000 பங்குகள் கொண்டது)			
வசூலிக்கப்பட்ட பங்குத் தொகை	...	ரூ.	65,395
சங்கத்தின் க்ஷேம நிதி	...	ரூ.	1,89,586
சங்கத்தின் இதர நிதிகள்	...	ரூ.	2,22,105

1. இந்திய யூனியன் முழுவதிலுமுள்ள தேசிய இந்திய வைத்தியர்களும், இதர விதமான பட்டம் பெற்ற தேசிய வைத்தியர்களும் இந்த சங்கத்தில் மெம்பராகச் சேரலாம்.

பங்கு ஒன்றுக்கு ரூ. 5—00. பிரவேச கட்டணம் 25 நயாபைசாக்கள்)

2. ஆயுர்வேத, சித்த, யூனானி தேசிய மருந்துகள், சாஸ்த்ரீய முறைப்படியும், தக்கமேற்பார்வையுடனும் தயார் செய்து, தேசிய மருந்துகளைக் கையாளும் வைத்தியர்களுக்கு சப்ளை செய்யும் சிறந்த கூட்டுறவு சங்கம்.

— எமது வெளியீடுகள். —

1. **வைத்ய யோகரத்னவளி** ஆங்கில பிரதி ரூ. 6—00
   ,, தெலுங்கு பிரதி ரூ. 6—50
2. **சித்தபார்மகோபியா** ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது விலை ரூ. 3—00
3. **யூனானி பார்மகோபியா** ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது விலை ரூ. 3—00

(தபால் கட்டணம், விற்பனை வரி பிரத்தியேகம்.)

கிளை அலுவலகங்கள் :—

(1) 20/320, பெட்டி பொட்டலவாரி தெரு, கவர்னர் பேட்டை, விஜயவாடா—2. (ஆந்திர ராஜ்யம்.)

(2) 88, ஆற்காடு சீனிவாச ஆச்சாரி தெரு, பெங்களூர்—2. (மைசூர் ராஜ்யம்.)

(3) கோவாபரேடிவ் அர்பன் பாங்கு கட்டிடம், கல்லை ரோடு, கோழிக்கோடு—2. (கேரள ராஜ்யம்.)

(4) நகர விற்பனை டிப்போ. 4/186, மவுண்ட் ரோடு, மதராஸ்—2. டெலிபோன் நெ. 86520.

VAIDYACHANDRIKA JUNE—1959 Regd. No. M. 4018.

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினுல் கண்டுபிடிக்கப்பட்

கைகண்ட பலனளிக்கும்

"சக்தி ஸஞ்ஜீவி"

(Regd.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டிகளை எந்நிலையிலும்
போக்குவதிலும், வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷத
எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர் :—

சக்தி விலாஸ வைத்தியசாலா,

கரூர். (S. Ry.)

Printed at the Srivilasam Press, Srirangam and Published by S. V. Radhakrishna Sastri for Tamilnad Ayurveda Maha Mandalam, Bharat Ayurveda Sala, 27, Chinnakadai Street, Teppakulam, Tiruchy

Editor: S. M. Sundararajacharya, Srirangam.